www.Padasalai.Net www.TrbTnpsc.com

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025

வகுப்பு : 11 | பதிவு எண் : 11105
காலம் : 3.00 மணி

## தமிழ்

மொத்த மதிப்பெண்கள் : 90

குறிப்பு : ❖ அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
❖ கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

### பகுதி-I

14x1=14

1. பொருத்தமான இலக்கிய வடிவம் எது ?
   அ) எதிலிக்குருவிகள் – மரபுக் கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு – சிறுகதை
   இ) யானை டாக்டர் – குறும் புதினம் ஈ) ஐங்குறுநூறு – புதுக்கவிதை
2. 'நல்ல' என்ற அடைமொழியுடன் சிறப்பித்துக் கூறப்படும் நூல் எது ?
   அ) ஐங்குறுநூறு ஆ) பரிபாடல் இ) குறுந்தொகை ஈ) கலித்தொகை
3. 'காவடிச் சிந்துக்குத் தந்தை' என்று அழைக்கப்படுபவர் யார் ?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
4. துன்பப்படுபவர் ..................
   அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
   இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்
5. தொல்காப்பியத்தில் உள்ள இயல்களின் [illegible]
   அ) 3 ஆ) 9 இ) 27 ஈ) 5
6. உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
   அ) ஜி.யு.போப் ஆ) சாமுவேல் பெப்பிசு இ) கீட்ஸ் ஈ) ஜான் ரஸ்கின்
7. 'கொழுஞ்சோறு' என்பதன் இலக்கணக்குறிப்பு
   அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) வேற்றுமைத்தொகை
8. தமிழின் முதல் பாவடிவ நாடக நூல்
   அ) ரகசிய வழி ஆ) மனோன்மணியம் இ) தொகை விளக்கம் ஈ) மக்கள் உள்ளம்
9. 'பிசிராந்தையார்' என்ற நாடகத்திற்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்
   அ) கவிமணி ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) சுரதா
10. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்வு.

| | | | |
|---|---|---|---|
| அ) விரியன் | – 1) தண்டை | | அ) 3, 1, 4, 2 |
| ஆ) திருகுமுருகு | – 2) காலாழி | | ஆ) 3, 4, 2, 1 |
| இ) நாங்கூழ்ப்புழு | – 3) சிலம்பு | | இ) 4, 1, 3, 2 |
| ஈ) குண்டலப் பூச்சி | – 4) பாடகம் | | ஈ) 4, 3, 2, 1 |

11. யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர் ? – இது எவர் மொழி ?
    அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ்ப்புழு இ) நடராசன் ஈ) புல்
12. 2011 ஆம் ஆண்டு கணினிப் பாடப்பிரிவு இளநிலைப் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற திருநங்கை
    அ) ஜோயிதா மோண்டல் ஆ) நர்த்தகி நடராஜ் இ) தாரிகா பானு ஈ) பிரித்திகா யாஷினி



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

13. 'புலியைப் போலத் தொடர்ந்தான்' — இது எவ்வகை உவமை ?

அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு

14. 'நேரொன்றாசிரியத்தளை' எனப்படுவது

அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்

## பகுதி-II (பிரிவு -1)

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3x2=6

15. 'பாயிரம்' பற்றி நீவிர் அறியும் கருத்து யாது ?

16. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்பதாகப் புறநானூறு கூறுகிறது ?

17. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை ?

18. 'ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின' — தொடரின் பொருள் யாது ?

## பிரிவு -2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x2=4

19. 'பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது' ஏன் ?

20. 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது ?

21. உ.வே.சா அவர்கள் பயின்ற கல்விமுறை பற்றி எழுதுக.

## பிரிவு -3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7x2=14

22. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) திருப்புகழ் ஆ) அரும்பொருள்

23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

உளை, உலை, உழை

24. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) வைத்தார் ஆ) ஆழ்க

25. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எத்தனை ? அவை யாவை ?

26. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

காலங்காத்தால எந்திரிச்சுப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்

27. அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.

அ) அறிவைத் தேடிப் போகும் இடம்; உலகம் அறிய உதவும் இடம் (அகம்) ____

ஆ) வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) ..............

28. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) கானல்நீர் ஆ) நிறைகுடம்

29. 'Multiple personality'– கலைச்சொல்லாக்கம் தருக.

**குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.**

சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

எட்டுவனா

30. வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக.

தமிழர் ஆற்றுத் தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டி பாசனம் செய்தனர்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## பகுதி-III (பிரிவு-1)

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2x4=8**

31. சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு எது? ஏன்?
33. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?
34. "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

## பிரிவு-2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2x4=8**

35. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
36. ஃபிரெஸ்கோ ஓவியங்கள்; சுற்றாலிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
37. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் – குறிப்பு வரைக.
38. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவன யாவை?

## பிரிவு-3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **3x4=12**

39. அ) சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) பிறிதுமொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.

40. குறிஞ்சித் திணை (அல்லது) பொருண்மொழிக்காஞ்சித் துறையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

41. இலக்கிய நயம் பாராட்டுக.

பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை யற்றிடும் காணீர்

– பாரதியார்

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.

அ) எறும்பு ஊரக் கல்லும் தேயும் (அல்லது) ஆ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

43. தமிழாக்கம் தருக.

i) The pen is Mightier than the sword.

ii) Knowledge rules the world

iii) Winners don't do different things; they do things differently

iv) Work while you work and play while you play.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.**

பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

சங்கரதாஸ் சுவாமிகள் 'சமரச சன்மார்க்க சபை' என்னும் நாடகக் குழுவை உருவாக்கினார். இந்தக் குழுவில் பயிற்சி பெற்ற எஸ்.ஜி. கிட்டப்பா நாடகக் கலைத்துறையில் பெரும்புகழ் ஈட்டினார். மேடை நாடகம் தாழ் குன்றிய நிலையில், மதுரை வந்த சுவாமிகள் 1918இல், 'தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை' என்னும் நாடக அமைப்பை உருவாக்கி ஆசிரியர் பொறுப்பேற்றார். இங்கு உருவானவர்களே டி.கே.எஸ். சகோதரர்கள். நாடகத்தின்மூலம் மக்களுக்கு அறவொழுக்கத்தையும் தமிழின் பெருமையையும் பண்பாட்டையும் தம் சுவைமிகுந்த பாடல், உரையாடல் வழியே உணர்த்திய சங்கரதாஸ் சுவாமிகளை நாடகத் துறைக் கலைஞர்கள், 'தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்' என்று உளமகிழ்ந்து போற்றுகின்றனர்.

**வினாக்கள் :**

1. சமரச சன்மார்க்க சபையை உருவாக்கியவர் யார் ?
2. 'தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை' எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது ?
3. சங்கரதாஸ் சுவாமிகள் ஆசிரியராகப் பொறுப்பேற்ற நாடக அமைப்பு எது ?
4. 'தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்' என்று அழைக்கப்படுபவர் யார் ?

## பகுதி-IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3x6=18**

44. அ) 'ஊக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' – இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

(அல்லது)

ஆ) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை ?

45. அ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'கல்லும் கதை சொல்லும்' என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்குக.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) சிம்பொனித் தமிழர் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும்பாடப்பகுதி கொண்டு எழுதுக.

## பகுதி - V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** **4+2=6**

அ) 'உண்டால் அம்ம .........' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.

ஆ) 'பெரிது'. என முடியும் திருக்குறளை எழுதுக.

******************************************

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com